இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 332 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 29 – திங்கள்கிழமை 13 ஜூலை 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 332 : Thiruvalluvar Year - 2057 - Aani 29 - Monday 13 July 2026 - Madurai 8 Pages ₹ 5.00

### கரூர் கொடுந்துயரச் சம்பவம்!

# சாட்சிகளை அச்சுறுத்துகிறார் முதல்வர்!

## உச்சநீதிமன்ற கண்காணிப்புக் குழுவிடம் தி.மு.க. மனு!

சென்னை, ஜூலை 13 -

**கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து முதல்அமைச்சர் விஜய் பேசியது சாட்சிகளை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது என்றும், எனவே அவர் மீது சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் கண்காணிப்புக் குழுவுக்கு தி.மு.க. சார்பில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.**

கரூரில் த.வெ.க. தலைவரும், முதல்அமைச்சருமான விஜய் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 27ந்தேதி அன்று மேற்கொண்ட பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41பேர் பலியானார்கள். இந்த வழக்கை உச்சநீதிமன்றம் கண்காணிப்பில் சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. இந்த நிலையில் கரூருக்கு சனிக்கிழமை சென்ற முதல் அமைச்சர் விஜய், இந்த சம்பவத்தை சுட்டிக்காட்டி முந்தைய தி.மு.க. அரசு மற்றும் காவல் துறை மீது பரபரப்பு குற்றச்சாட்டுக்களை கூறினார்.

**சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்ய வேண்டும்!**



அவருடைய இந்தப் பேச்சு வழக்கின் சாட்சிகளை அச்சுறுத்தும் வகையில் இருப்பதாகவும், எனவே அவர் மீது சி.பி.ஐ. தனியாக வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்றும் தி.மு.க. சார்பில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

இதுதொடர்பாக கழக. அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, இந்த வழக்கு விசாரணையை கண்காணிக்கும் உச்சநீதிமன்றம் ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ் தோகி தலைமையிலான கண்காணிப்பு குழுவுக்கு புகார் கடிதம் அனுப்பி உள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:-

கரூரில் கடந்த 10ந்தேதி அன்று நடைபெற்ற கூட்டத்தில் முதல்அமைச்சர் விஜய், கரூர் துயரச் சம்பவத்திற்கு கரூர் போலீஸ்துறை முழுப் பொறுப்பு போலவும், இதன் பின்னணியில் அரசியல் சதி இருப்பது போன்றும் பேசியுள்ளார். அவருடைய இந்த பேச்சு வழக்கின் முக்கிய சாட்சிகளை கலைக்கும் வகையில் அமைந்துள்ளது.

ஏற்கனவே தமிழக அரசின் உள்துறைச் செயலாளர், போலீஸ் டி.ஜி.பி. ஆகியோர் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள எதிர் ஆவணத்தில், த.வெ.க. அமைப்பாளர்களின் திட்டமிடப்படாத செயல்பாடுகளும், விதிமீறல்களுமே இந்த உயிரிழப்பு சம்பவத்துக்கு காரணம் என்று தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதே உள் துறையைத் தன்வசம் வைத் துள்ள முதல்அமைச்சர் அதற்கு முற்றிலும் முரணாகப் பொதுவெளியில் பேசி சாட்சிகளைத் திசைதிருப்ப முயன்றுள்ளார். எனவே அவர் மீது சி.பி.ஐ. தனியாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும்.

**சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகச் செய்திட வேண்டும்!**

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் கரூர் த.வெ.க. மாவட்ட செயலாளர் மதியழகன், த.வெ.க. பொதுச்செயலாளர் அமைச்சர் ஆனந்த், இணை செயலாளர் அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, முதல்அமைச்சரின் தனி செயலாளர் ஜெகதீஷ் பழனிசாமி ஆகியோர் குற்றவாளிகள் என்று வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. சாட்சிகளைச் சிதைக்கக்கூடாது என்ற நீதிமன்றக் கட்டுப்பாடுகளும் அவர்கள் மீது விதிக்கப்படவில்லை. எனவே வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அவர்களை சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகச் செய்து, சாட்சிகளை அச்சுறுத்தக் கூடாது என்ற நிபந்தனையுடன் கூடிய பிணைப் பத்திரங்களை எழுதி வாங்கவும் சி.பி.ஐ.க்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதே கோரிக்கை அடங்கிய மனுவை டெல்லி சி.பி.ஐ. இயக்குனர் அலுவலகத்துக்கும் ஆர்.எஸ்.பாரதி அனுப்பி வைத்துள்ளார்.

---

### த.வெ.க.வின் குதிரைபேரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பேசிய

# எம்.ஆர்.விஜயபாஸ்கரின் பேச்சு குறித்து ஆளுநரிடம் இன்று புகார்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தகவல்!

*சென்னை, ஜூலை 13 -*

*த.வெ.க.வில் இணைந்த எம்.ஆர்.விஜயபாஸ்கரின் பேச்சு குறித்து ஆளுநரிடம் தி.மு.க. சார்பில் புகார் மனு அளிக்கப்படும் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தெரிவித்துள்ளார்.*

*த.வெ.க.வின் குதிரை பேரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பேசிய முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கரின் பேச்சு குறித்து தி.மு.க. சார்பில் ஆளுநரிடம் புகார் அளிக்கப்படும் என, தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.*



*சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க.வினர் தங்களை அணுகியதால் தான் அந்த கட்சியில் இணைந்தோம் என உண்மையை ஒப்புக் கொண்டு எம்.ஆர்.விஜயபாஸ்கர் பேசியதை குறிப்பிட்டார். எனவே, த.வெ.க.வின் குதிரை பேரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பேசிய எம்.ஆர்.விஜயபாஸ்கரின் பேச்சு குறித்து தி.மு.க. சார்பில் ஆளுநரிடம் நாளை (இன்று) புகார் அளிக்கப்படும் என ஆர்.எஸ்.பாரதி தெரிவித்தார்.*

---

### AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தி

# சிறுபான்மை வாக்காளர்கள் நீக்கம்!

## ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு ஐ.நா. புகார் கடிதம்!

*நியூயார்க், ஜூலை 13 -*

*SIR தொடர்பாக ஐ.நா. சபையின் சிறுபான்மை விவகார பிரிவு அறிக்கை ஒன்றை தயாரித்து ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு அனுப்பி உள்ளது. கடந்த மே ஒன்றாம் தேதி அனுப்பியுள்ள இந்த கடிதத்தில் 13 மாநிலங்களில் நடைபெற்ற SIR நடவடிக்கை குறித்து கவலை தெரிவித்துள்ளது. SIR மூலம் லட்சக்கணக்கான சிறுபான்மை வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதற்கு வெளிப்படைத்தன்மை இல்லாத AI தொழில் நுட்பத்தை தேர்தல் ஆணையம் பயன்படுத்துவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாக்காளர்களுக்கு ஆவணங்களை வழங்க, குறைகளை தீர்க்க போதிய அவகாசம் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் இஸ்லாமியர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட விதம் குறித்து கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதி குறித்து இந்திய அரசு 60 நாட்களில் பதிலளிக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.*

---

### ஆக்கிரமிப்பாளர்களுக்கு ரூ.25 ஆயிரம் கோடி

# கோவில் சொத்துகளை தாரை வார்த்த த.வெ.க. அரசு!

## இந்து அமைப்புகள் கடும் கண்டனம்!

சென்னை, ஜூலை 13 -

கரூரில் ரூ.25 ஆயிரம் கோடி மதிப்புள்ள கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பாளர்களுக்கு தாரை வார்க்கும் விதமாக பத்திரப்பதிவுக்கான தடையை நீக்கியுள்ள விவகாரத்தில், இப்படியொரு நம்பிக்கை துரோகம், கொடுஞ்செயல் புரிந்துள்ள த.வெ.க. அரசுக்கு ஆலய வழிபடுவோர் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கரூர் மாவட்டத்தில் உள்ள கல்யாண பசுபதீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான 214.29 ஏக்கர், புகழிமலை பாலசுப்ரமணிய சுவாமி கோயிலுக்கு சொந்தமான 204.52 ஏக்கர், குப்புச்சிபாளையம் ரவீஸ்வரர் சுவாமி கோயிலுக்கு சொந்தமான 132.49 ஏக்கர் மற்றும் வெஞ்சமாங்கூடலூர் விக்ருதீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான 2533.65 ஏக்கர் என ரூ.25 ஆயிரம் கோடி மதிப்பில் மொத்தம் 3084.95 ஏக்கர் நிலங்கள் உள்ளன.

ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் உள்ள இந்த 3084.95 ஏக்கர் நிலங்களையும் தனிநபர்களின் பெயர்களில் பத்திரப்பதிவு செய்து கொடுக்கக்கூடாது என அறநிலையத்துறை ஏற்கெனவே தடை விதித்திருந்தது.

**இந்து அமைப்புகள் கடும் கண்டனம்!**

இந்நிலையில் கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் பலியானவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு அரசு பணி வழங்குவதற்காக முதல்வர் விஜய் ஜூலை 10 அன்று கரூர் சென்ற நிலையில், அதற்கு ஒரு நாள் முன்பாக 9ம் தேதி கரூரில் உள்ள இந்த 4 கோயில்களுக்கு சொந்தமான ரூ. 25 ஆயிரம் கோடி மதிப்புள்ள இடங்களை ஆக்கிரமிப்பாளர்களின் பெயர்களில் பத்திரப்பதிவு செய்து கொடுக்க விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி அறநிலையத்துறை ஆணையர் டி.ஜி.வினய் உத்தரவிட்டிருந்தது பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

அறநிலையத்துறை ஆணையரின் இந்த நடவடிக்கைக்கு பா.ஜ.க., இந்து முன்னணி உள்ளிட்ட இந்து அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் இதுதொடர்பாக ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவரான மயிலாப்பூரைச் சேர்ந்த டி.ஆர். ரமேஷ் கூறியதாவது:

கரூரில் உள்ள 4 கோயில்களுக்கு சொந்தமான ரூ. 25 ஆயிரம்கோடி மதிப்புள்ள சொத்துகளை தனியாருக்கு தாரை வார்ப்பது என்பது கோயில் நலனில் அக்கறை கொண்ட யாருமே ஏற்றுக்கொள்ள முடியாத அக்கிரமம். தவெக அரசு இதை நிர்வாக சீர்திருத்தம் எனக்கூற முயற்சிக்கிறது. உண்மையில் இது கோயில்களுக்கும், அந்த கோயில்களை வணங்கும் லட்சக்கணக்கான பக்தர்களுக்கும் செய்யும் மிகப்பெரிய நம்பிக்கை துரோகம். இந்த நிலங்களை தனிநபர்கள் பெயரில் பத்திரப்பதிவு செய்வதற்கான தடையை த.வெ.க. அரசு நீக்கியுள்ளது வெட்கக்கேடானது. வேதனைக்குரியது.

இப்படியொரு துரோகம், கொடுஞ்செயல் கடந்த தி.மு.க. ஆட்சியில் நடைபெறவில்லை. லஞ்சம் கேட்டால் என் பெயரைச் சொல்லுங்கள் எனக்கூறும் முதல்வர் விஜய், முதலில் இந்த உத்தரவை வாபஸ் வாங்கி ரூ. 25 ஆயிரம் கோடி மதிப்புள்ள கோயில் சொத்துகள் சூறையாடப்படுவதை ஒருபோதும் வேடிக்கை பார்க்க மாட்டேன் என்பதை நிரூபிக்கட்டும்.

இது கடைத்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக இருக்கிறது. ஜூலை 10ம் தேதி முதல்வர் விஜய் கரூர் செல்கிறார் என்பதற்காக இதுதொடர்பாக அறநிலையத்துறை திருப்பூர் இணை ஆணையரும், கரூர் மாவட்ட ஆட்சியரும் தங்களது பரிந்துரை கடிதங்களை 9ம் தேதி காலையில் அறநிலையத்துறை ஆணையருக்கு அனுப்பி வைக்கின்றனர்.

**மின்னல் வேகத்தில் தடை நீக்கம்!**

அந்த கடிதங்களை ஏற்று ஆணையரும் அன்றைய தினமே மின்னல் வேகத்தில் செயல்பட்டு தடையை நீக்கி உத்தரவு பிறப்பிக்கிறார். கோயில் சொத்து விவகாரத்தில் அசுர வேகத்தில் உத்தரவு பிறப்பித்து இருப்பதன் பின்னணி என்ன என்பது கேள்விக்குறியாக உள்ளது. இதன்மூலம் தமிழக அரசே கோயில் சொத்துகளின் ஆக்கிரமிப்புகளை சட்டப்பூர்வமாக்க முயற்சிக்கிறது.

இதேபோல ஆக்கிரமிப்பில் உள்ள கரூர் வெண்ணைமலை கோயிலுக்கு சொந்தமான 500 ஏக்கர் நிலத்தையும் உயர் நீதிமன்ற உத்தரவுப்படி ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்க வேண்டும். கோயில் சொத்துகளை பாதுகாக்கும் அதேநேரம் நிலமற்ற ஏழைகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவுவதை உறுதி செய்ய வேண்டும்.

குறிப்பாக தமிழக அரசு, ஆக்கிரமிப்பாளர்களின் தேர்தல் கணக்குக்கு செவி கொடுக்காமல் நீதி, சட்டத்துக்கு மட்டும் செவி சாய்க்க வேண்டும். எனவே கரூர் கோயில்கள் விவகாரம் தொடர்பான உத்தரவை விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு உடனடியாக திரும்பப் பெறாவிட்டால் ஒட்டுமொத்த இந்து அமைப்பினரும் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழியில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

---

### த.வெ.க. ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு சீர்கேடு!

# நெல்லையில் தொழிலாளி வெட்டிக் கொலை - பொன்னேரியில் வாலிபர் படுகொலை!

நெல்லை, ஜூலை 13 –

நெல்லை டவுன் பகுதியில், பிளம்பிங் தொழிலாளி மர்ம கும்பலால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நெல்லை டவுன் அருகே உள்ள பாறையடியைச் சேர்ந்த 38 வயதான ஆவுடையப்பன், பிளம்பிங் தொழில் செய்து வந்தார். அவருக்கு திருமணமாகி, ஒரு மகனும், மகளும் உள்ளனர்.

இந்நிலையில், கோட்டையடி ஊய்காட்டு சுடலை மாடன் கோவில் அருகே நடந்து சென்று கொண்டிருந்த ஆவுடையப்பனை, இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் அரிவாளால் சரமாரியாக வெட்டிவிட்டு தப்பிச் சென்றனர். படுகாயமடைந்த ஆவுடையப்பன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்து வந்த தச்சநல்லூர் காவல்நிலைய போலீசார், உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்ப முயன்றனர். ஆனால், குற்றவாளிகளை கைது செய்யும் வரை உடலை எடுக்க அனுமதிக்க முடியாது எனக் கூறி, குடும்பத்தினரும், உறவினர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். உரிய நடவடிக்கை எடுப்பதாக போலீசார் உறுதியளித்ததை தொடர்ந்து, போராட்டம் கைவிடப்பட்டது. பின்னர், ஆவுடையப்பன் உடலை மீட்ட போலீசார், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். முன்விரோதம் காரணமாக, இந்த படுகொலை நடைபெற்றதாக கூறப்படுகிறது. த.வெ.க. ஆட்சியில் அதிகரிக்கும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

**பொன்னேரி**

பொன்னேரியை அடுத்த குன்னமஞ்சேரி பகுதியை சேர்ந்த 27 வயதான சுனில், அப்பகுதியில் உள்ள தனியார் தொழிற்சாலையில் வெல்டராக பணியாற்றி வந்தார். நேற்றிரவு வீட்டிலிருந்து வெளியே சென்ற சுனில், அதன் பிறகு வீடு திரும்பவில்லை. இந்நிலையில், ஆரணியாற்றல், முகம் சிதைந்த நிலையில், இளைஞர் ஒருவரின் சடலம் கிடப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார், உடலை மீட்டு விசாரணை மேற்கொண்டபோது, கொல்லப்பட்டது, குன்னமஞ்சேரியை சேர்ந்த சுனில் என்பதை உறுதிப்படுத்தினர். தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், கடந்த ஆண்டு சின்னக்காவனம் பகுதியில், தீபன் என்பவரின் நண்பர்களை, சுனில் அரிவாளால் வெட்டியதாக கூறப்படுகிறது.

இதற்கு பழிக்குப் பழியாக நேற்றிரவு சுனிலுக்கு மது வாங்கிக் கொடுத்த தீபன், பீர் பாட்டிலால் தாக்கி, முகத்தை சிதைத்து கொலை செய்துவிட்டு தப்பியோடியது தெரியவந்தது. இந்த கொடூர சம்பவம் தொடர்பாக, 2 பேரை போலீசார் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். தப்பியோடிய தீபனை போலீசார் தேடி வருகின்றனர்.

